உதவி அமர்வு நீதிமன்றம், சங்கரன்கோவில்

**முன்னிலை: திரு. P. மகேந்திர வர்மா, B.A., B.L.,**
**உதவி அமர்வு நீதிபதி, சங்கரன்கோவில்**

**2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07 ஆம் நாள் செவ்வாய் கிழமை**
(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 24 ம் நாள்)

**அமர்வு வழக்கு எண்.691/2018**
(CNR.No.TNTS07-000771-2018)

***

(சங்கரன்கோவில், நீதித்துறை நடுவர் நீதிமன்ற முதல்நிலை விசாரணை பதிவேட்டு வழக்கு எண்.30/2017, அந்நீதித்துறை நடுவரால் மேல்விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளது)

**பனவடலிசத்திரம் காவல்நிலையக் குற்ற எண்.111/2018**

**குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர் மற்றும் விலாசம்**:

1. பிரகாஷ்
த/பெ சங்கரபாண்டியன்,
கீழநீலிதநல்லூர்

2. பொன்செல்வராஜ்சுகுமாறன்
த/பெ சங்கரபாண்டியன்
சாமிநாதபுரம் தெரு, கீழநீலிதநல்லூர்

3. செல்வக்குமார்
த/பெ புதியவன்
நாராயணபுரம் தெரு, கீழநீலிதநல்லூர்

4. சங்கரபாண்டியன்
த/பெ பொன்னுச்சாமி
சாமிநாதபுரம் தெரு, கீழநீலிதநல்லூர்

5. சீனியம்மாள்
க/பெ சங்கரபாண்டியன்

கீழநீலிதநல்லூர்

**<u>குற்றமும் குற்றச்சாட்டுக்களின் விபரங்களும்</u>:**

| | | |
|---|---|---|
| 4, 5 எதிரிகளின் மீதான 1வது குற்றச்சாட்டு | : | இ.த.ச., 147 பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்கான சட்டவிரோத கலகக் கும்பலில் உறுப்பினராக இருத்தல் என்னும் குற்றம் |
| 1, 2, 3 எதிரிகளின் மீதான 2வது குற்றச்சாட்டு | : | இ.த.ச., 148 பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்கான சட்டவிரோத கலகக் கும்பலில் கையில் அபாயகரமான ஆயுதத்துடன் உறுப்பினராக இருத்தல் என்னும் குற்றம் |
| 1 முதல் 5 எதிரிகளின் மீதான 3வது குற்றச்சாட்டு | : | இதச பிரிவு., 294(பி) பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்கான பொதுயிடத்தில் ஆபாசமாக பேசுதல் என்னும் குற்றம் |
| 1வது எதிரியின் மீதான 4வது குற்றச்சாட்டு | : | இதச பிரிவு., 307 பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்கான கொலை முயற்சி செய்தல் என்னும் குற்றம் |
| 2வது எதிரியின் மீதான 5வது குற்றச்சாட்டு | : | இதச பிரிவு., 307 பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்கான கொலை முயற்சி செய்தல் என்னும் குற்றம் |
| 3வது எதிரியின் மீதான 6வது குற்றச்சாட்டு | : | இதச பிரிவு., 324 பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்கான அபாயகரமான ஆயுதத்தால் தம்மிச்சையாக தாக்கி சாதாரண ரத்தக் காயத்தை ஏற்படுத்துதல் என்னும் குற்றம் |
| 1 முதல் 5 எதிரிகளின் மீதான 7வது குற்றச்சாட்டு | : | இதச பிரிவு., 506(2)(2 எண்ணிக்கைகள்) பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்கான குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்தல் என்னும் குற்றம் |
| 3, 4, 5வது எதிரிகளின் மீதான 8வது குற்றச்சாட்டு | : | இதச பிரிவு., 307 உ/இ 149 பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்கான குற்றம் புரிய வேண்டுமென்ற பொதுவான நோக்கத்துடன் சட்டவிரோத கும்பலில் உறுப்பினராக இருந்து |

கொலை முயற்சி செய்தலுக்கு உடந்தையாக இருத்தல் என்னும் குற்றம்

**<u>எதிரிகளின் வாதுரை</u>**:

| | | |
|---|---|---|
| 1வது குற்றச்சாட்டு | : | 4, 5 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை |
| 2 வது குற்றச்சாட்டு | : | 1 முதல் 3 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை |
| 3 வது குற்றச்சாட்டு | : | 1 முதல் 5 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை |
| 4 வது குற்றச்சாட்டு | : | 1 வது எதிரி குற்றவாளி இல்லை |
| 5 வது குற்றச்சாட்டு | : | 2 வது எதிரி குற்றவாளி இல்லை |
| 6 வது குற்றச்சாட்டு | : | 3 வது எதிரி குற்றவாளி இல்லை |
| 7 வது குற்றச்சாட்டு | : | 1 முதல் 5 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை |
| 8 வது குற்றச்சாட்டு | : | 3, 4 , 5 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை |

**<u>நீதிபதியின் தீர்மானம்</u>**: 1 வது எதிரி இ.த.ச., 148, 294(பி), 307, 506(2) (2 எண்ணிக்கை) பிரிவின் கீழும், 2 வது எதிரி இ.த.ச.,148, 294(பி), 307, 506(2) (2 எண்ணிக்கை) பிரிவின் கீழும், 3 வது எதிரி இ.த.ச., 148, 294(பி), 324, 506(2) (2 எண்ணிக்கை), 307 உ/இ 149 பிரிவின் கீழும், 4 வது, 5 வது எதிரிகள் இ.த.ச., 147, 294(பி), 506(2) (2 எண்ணிக்கை), 307 உ/இ 149 பிரிவின் கீழும் குற்றவாளிகள் அல்லர் என தீர்மானிக்கப்படுகிறது.

**<u>தீர்ப்பு</u>**: 1 வது எதிரி இ.த.ச., 148, 294(பி), 307, 506(2) (2 எண்ணிக்கை) பிரிவின் கீழும், 2 வது எதிரி இ.த.ச.,148, 294(பி), 307, 506(2) (2

எண்ணிக்கை) பிரிவின் கீழும், 3 வது எதிரி இ.த.ச., 148, 294(பி), 324, 506(2) (2 எண்ணிக்கை), 307 உ/இ 149 பிரிவின் கீழும், 4 வது, 5 வது எதிரிகள் இ.த.ச., 147, 294(பி), 506(2) (2 எண்ணிக்கை), 307 உ/இ 149 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் அல்லர் என முடிவு செய்து, எதிரிகளை கு.வி.மு.ச., 235(1) பிரிவின்கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் பிறப்பித்துக் கொடுத்த பிணைமுறி இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் தானாகவே ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

அரசு தரப்பு வழக்கறிஞர் : திருவாளர். S.கண்ணன்

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் : திருவாளர்.P.அல்லிராஜ்

## தீ ர் ப் பு ரை

1 முதல் 5 எதிரிகள் முன்விரோதம் காரணமாக 29.10.2016 ஆம் தேதி இரவு 9.30 மணியளவில் கையில் கம்பி அரிவாள் இவைகளை எடுத்துக்கொண்டு அ.சா.1 ராமர் வீட்டு முன்பு வந்து அங்கு நின்று கொண்டிருந்த அ.சா.2 லட்சுமணனை பார்த்து டாக்டர் ராணியம்மாளுக்கும் தங்களுக்கும் உள்ள இடப்பிரச்சனையில் நீ ஏண்டா தலையிடுற சின்ன பிள்ளைகள் நடமாடுற இடத்துல பட்டாசு வெடிக்கிறீயே எனது அம்மா நடந்து போகும்போது வெடி வைத்து எனது அம்மா மீது போட்டுள்ளாய் புண்டமவனே என்று கூறிக்கொண்டு கம்பியால் அ.சா.2 லெட்சுமணனை பார்த்து சாவுடா புண்டமவனே என்று கூறிக்கொண்டு கம்பியால் நடுமண்டையில் ஓங்கி அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும், அ.சா.2 லெட்சுமணன் சம்பவயிடத்தில் கீழே விழவும் அ.சா.1, சாட்சிகள் அ.சா.3, அ.சா.4 ஆகியோர்கள் ஓடி வந்து அவனை அடித்து கொன்று விடுவார்களோ என்று தூக்கியபோது 2 வது எதிரி அவர் கையில் வைத்திருந்த அரிவாளைக் கொண்டு அ.சா.4 நாகராஜனை பார்த்து நீயும் அவனோடு சேர்ந்து சாவுடா என்று சொல்லிக்கொண்டு அ.சா.4 ன் தலையின் வலதுபக்கம் வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தியும்,

3 வது எதிரி தன் கையில் வைத்திருந்த அரிவாளைக் கொண்டு அ.சா.1ன் வலதுகால் முட்டியில் வெட்டி இரத்தக்காயம் ஏற்படுத்தியும், காயம்பட்ட நபர்கள் வலியால் சத்தம் போடவும் அ.சா.3 பொன்ராஜ் சம்பவயிடத்தில் தனது தகப்பனாரை துாக்க முற்பட்டதாகவும், அந்த சமயத்தில் 1 முதல் 5 எதிரிகளும் அ.சா.4 நாகராஜன், அ.சா.3 பொன்ராஜ், அ.சா.1 ராமர் ஆகியோரை ஒன்றாக சேர்ந்து பிடித்து கீழே தள்ளி மாறி, மாறி மிதித்து ஊமைக்காயங்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். எனவே 1 முதல் 4 எதிரிகள், இ.த.ச 147, 148, 294(பி), 323, 324, 307, 506(2) பிரிவுகளின் கீழும், 5 வது எதிரி இதச 147, 148, 294(பி), 323 பிரிவுகளின் கீழும் தண்டிக்கப்படத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக, எதிரிகள் மீது மேற்படி பிரிவின் கீழ் பனவடலிசத்திரம் காவல்நிலைய ஆய்வாளரால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட குற்றப்பத்திரிக்கையின் அடிப்படையில், இவ்வழக்கின் எதிரிகள் மீது முதலில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.30/2017 என வழக்கானது கோப்புக்கு எடுக்கப்பட்டு, அங்கு மேற்படி எதிரி முன்னிலையானதும், வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு கு.வி.மு.ச., 207 பிரிவின் கீழ் இலவசமாய் வழங்கப்பட்டுள்ளன. 1வது எதிரிக்கு எதிரான இ.த.ச., பிரிவுகள் 148, 294(பி), 307, 506(2) (2 எண்ணிக்கை)ன் கீழான குற்றம், 2 வது எதிரிக்கு எதிரான இ.த.ச., பிரிவுகள் 148, 294(பி), 307, 506(2) (2 எண்ணிக்கை)ன் கீழான குற்றம், 3 வது எதிரிக்கு எதிரான இ.த.ச., பிரிவுகள் 148, 294(பி), 324, 506(2) (2 எண்ணிக்கை), 307 உ/இ 149 ன் கீழான குற்றம், 4 வது, 5 வது எதிரிகளுக்கு எதிரான இ.த.ச., பிரிவுகள் 147, 294(பி), 506(2) (2 எண்ணிக்கை), 307 உ/இ 149 ன் கீழான குற்றமானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால், பின்னர் அந்நடுவர் நீதிமன்றம் மேற்படி வழக்கை மாண்புமிகு திருநெல்வேலி, முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் விசாரணைக்காக கு.வி.மு.ச., 209 பிரிவின் கீழ் பணிந்து சமர்ப்பித்துள்ளது. மேற்படி அமர்வு நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையானவுடன், எதிரிகள் மீதான வழக்கு, அமர்வு வழக்கு எண்.691/2018 என கோப்புக்கு எடுக்கப்பட்டு, அதன்பின் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கிற்காக இந்நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையான நிலையில், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலித்துப் பார்க்கப்பட்டும், அரசு தரப்பு மற்றும் எதிரிகள் தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், எதிரிகள் மீது குற்றச்சாட்டுக்கள் வனைந்து வழக்கை மேல் நடத்த போதுமான ஆதாரங்கள் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதியமையால், 1வது எதிரி மீது இ.த.ச., பிரிவுகள் 148, 294(பி), 307, 506(2) (2 எண்ணிக்கை) ன் கீழும், 2 வது எதிரி மீது இ.த.ச., பிரிவுகள் 148, 294(பி), 307, 506(2) (2 எண்ணிக்கை)ன் கீழும், 3 வது எதிரி மீது இ.த.ச.,பிரிவுகள் 148, 294(பி), 324, 506(2) (2 எண்ணிக்கை), 307 உ/இ 149 ன் கீழும், 4 வது, 5 வது எதிரிகள் மீதான இ.த.ச., பிரிவுகள் 147, 294(பி), 506(2) (2 எண்ணிக்கை), 307 உ/இ 149 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு, எதிரிகளுக்கு வாசித்துக்காட்டி, விளக்கி வினவப்பட்டபோது, எதிரிகள் தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை பொருத்து குற்றவாளிகள் இல்லையென மறுத்தார்கள். எனவே, அரசு தரப்பு விசாரணைக்கு வகை செய்யப்பட்டது. மேலும், எதிரிகளின் மீதான வழக்குக் குறித்து விசாரணை செய்வதற்காக, இவ்வழக்கு விசாரணை தொடர்ந்து மேல் நடத்தப்பட்டது. இவ்வழக்கில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையில் கண்ட சாட்சிப் பட்டியலில் மொத்தம் 15 சாட்சிகள் குறிப்பிட்டிருந்தது. அரசு தரப்பில் மேற்படி அ.சா.1 முதல் அ.சா.11 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். மேலும் அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், இவ்வழக்கில் அரசு தரப்பில் வழக்கு சொத்து சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. <u>**அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து புலனாகும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**</u>:

இவ்வழக்கின் புகார்தாரரான ராமர் 29.10.2016 ஆம் தேதியன்று தீபாவளி பண்டியை முன்னிட்டு அ.சா.1ன் தம்பி லட்சுமணன் அ.சா.2 அவர்கள் வீட்டு முன்பு மாலை 4.00 மணியளவில் பட்டாசு வெடித்துக் கொண்டிருந்தபோது எதிரி சங்கரபாண்டியன் குடும்பத்தார்கள்

இந்த இடத்தில் பட்டாசு வெடிக்காதே சின்ன புள்ளைகள் மேல் பட்டுவிடும் என்று கூறியதால் அ.சா.2 க்கும், எதிரிகள் குடும்பத்தாருக்கும் வாய்தகராறு ஏற்பட்டதாகவும், பின்பு இரவு 9.30 மணியளவில் அ.சா.1 அவரது தம்பி அ.சா.2 லட்சுமணன் அவரது சித்தப்பா அ.சா.4 நாகராஜன் அவரது மகன் அ.சா.3 பொன்ராஜ் ஆகியோர்கள் அ.சா.1 ன் வீட்டு முன்பு பேசிக்கொண்டிருந்தபோது 1 முதல் 5 எதிரிகள் , 2 வது எதிரி மனைவி ரேவதி மற்றும் 3 வது எதிரி மனைவி சந்திரலேகா ஆகியோர்கள் வந்து அ.சா.1 ன் தம்பி அ.சா.2 லெட்சுமணனை பார்த்து டாக்டர் ராணிக்கும் எதிரிகளுக்கும் உள்ள இடப்பிரச்சனையில் ஏண்டா தலையிடுறே சின்ன புள்ளைகள் நடமாடுற இடத்துல பட்டாச வெடிக்கிற புண்டமவனே என்று அசிங்கமாக ஏசியதாகவும், அப்போது 1 வது எதிரி அவன் கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் அ.சா.2 பார்த்து சாவுடா புண்ட மவனே என்று நடு மண்டையில் ஓங்கி அடித்ததாகவும், அப்போது அ.சா.2 மண்டை உடைந்து கீழே விழுந்ததாகவும், அ.சா.1 ம், அ.சா.1 ன் சித்தப்பா அ.சா.4 நாகராஜன் அவரது மகன் அ.சா.3 பொன்ராஜ் ஆகியோர்கள் அ.சா.1 ன் தம்பியை மீண்டும் அடித்து கொன்றுவிடுவார்கள் என்று தூக்கியபோது 2 வது எ திரி அவன் கையில் வைத்திருந்த அருவாளைக் கொண்டு அ.சா.1 ன் சித்தப்பா அ.சா.4 நாகராஜை பார்த்து நீயும் அவன் கூட சேர்ந்து சாவுடா என்று கூறி தலையின் வலது பக்கம் வெட்டியதாகவும், 3 வது எதிரி அவன் கையில் வைத்திருந்த அருவாளைக் கொண்டு அ.சா.1 ன் வலதுகால் முட்டில் வெட்டியதாகவும், பின்பு எதிரிகள் அனைவரும் சேர்ந்து அ.சா.1 யையும் அவரது சித்தப்பா அ.சா.4, அவரது மகன் அ.சா.3 ஆகியோரை பிடித்து கீழே தள்ளி விட்டுவிட்டு கீழே கிடந்த அவர்களை பார்த்து இனிமேல் எங்க பிரச்சனையில் தலையிட்டால் உங்களை வெட்டிக் கொலை செய்துவிடுவோம் என்று கொலைமிரட்டல் விடுத்ததாகவும், பனவடலிசத்திரம் காவல்நிலையத்தில் ஆஜராகி அ.சா.1 புகார்தாரர் ராமர் கொடுத்த புகாரினை பெற்ற பட்டியல் சாட்சி.14 உதவி ஆய்வாளர் திரு.பாலகிருஷ்ணன் பனவடலிசத்திரம் காவல்நிலைய குற்ற எண்.111/2016 இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 307, 506(2)ன் கீழ் அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். பின்னர் பனவடலிசத்திரம் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பொறுப்பில் இருந்த அ.சா.11

முத்து பிரேம்சந்த், மேற்படி வழக்கை மேல் விசாரணைக்காக அன்றைய தினம் 10.30 மணிக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 11.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் அ.சா.7 மொரார்ஜி தேசாய் மற்றும் அ.சா.8 முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு அ.சா.ஆ.7, பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.8 மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். பின்பு வழக்கில் சம்மந்தப்பட்ட சாட்சிகள் அ.சா.7 மொரார்ஜி தேசாய், அ.சா.8 முத்துக்குமார், அ.சா.1 ராமர், அ.சா.5 கருப்பசாமி, அ.சா.6 சுப்பையா ஆகியோர்களை வழக்கு சம்மந்தமாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு 30.10.2016 ஆம் தேதி 16.30 மணிக்கு வழக்கில் சம்மந்தப்பட்ட 4 வது எதிரியான சங்கரபாண்டியன் என்பவரை கீழ நீலிதநல்லூர் மேல பஸ் ஸ்டாண்டில் வைத்து அங்கு இருந்த சாட்சிகள் அ.சா.10 பேச்சிமுத்து, பட்டியல் சாட்சி.12 பேச்சிமுத்து ஆகியோர் முன்பு கைது செய்து விசாரித்த போது மேற்படி 4 வது எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்பு பதிவு செய்ததாகவும், மேற்படி 4 வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தின் அடிப்படையில் அன்றைய தினமே 17.30 மணிக்கு இந்த வழக்கின் 2 வது எதிரியான பொன் செல்வராஜ் சுகுமாறன் என்பவரின் வீட்டில் இருந்து சுமார் 30 செ.மீ இரும்பு பாகம் 11 செ.மீ கொடுக்குப்பிடியுடன் கூடிய மொத்தம் 41 செ.மீ நீளமுள்ள இரும்பு அருவாள் ஒன்று மற்றும் சுமார் 121 செ.மீ நீளமும் 2 செமீ சுற்றளவு உள்ள கம்பி ஒன்றை அதே சாட்சிகள் முன்பு எதிரி அடையாளம் காட்டி ஆஜர் செய்ததை அ.சா.ஆ.10 அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியதாகவும், அதன் பின்பு வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் பொன் செல்வராஜா சுகுமாறன் மற்றும் செல்வகுமார் ஆகியோர்களை அந்த இடத்தில் வைத்து கைது செய்தும், எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கும், கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான சா.பொ.ஆ.1 அருவாள் மற்றும் சா.பொ.ஆ.2 கம்பி ஆகியவற்றை அ.சா.ஆ.11 படிவம் 95 மூலம் பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும், பின்பு வழக்கில் சம்மந்தப்பட்ட சாட்சிகள் பேச்சி முத்து ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு 01.011.2016 ம் தேதி இவ்வழக்கில் சாட்சிகள் நாகராஜ், பொன்ராஜ், ராமர், லட்சுமணன் மற்றும் ஈஸ்வரி,

பாலமுருகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு கடந்த 10.01.2017 ம் தேதி வழக்கில் காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் ஆஷா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயம்பட்டவர்களான நாகராஜ் என்பவரின் காயச்சான்று அ.சா.ஆ.12, பொன்ராஜ் என்பவரின் காயச்சான்று அ.சா.ஆ.13, லட்சுமணன் என்பவரின் காயச்சான்று அ.சா.ஆ.14, ராமர் என்பவரின் காயச்சான்று அ.சா.ஆ.15 பெற்றதாகவும், பின்பு தனது விசாரணையை முடித்து சம்பவம் உண்மையென தெரியவந்ததால் 10.01.2016 ம் தேதி எதிரிகள் பிரகாஷ் மற்றும் பொன்செல்வ ராஜ் சுகுமாறன் ,செல்வகுமார், சங்கர்பாண்டியன், சீனியம்மாள் ஆகியோர்கள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 307, 506(2) IPC ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

5. விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளை பாதிக்கின்ற அம்சங்கள் குறித்து விளக்குவதற்காக, எதிரிகளிடம், கு.வி.மு.ச., 313(1)(b) பிரிவின் கீழ் வினவியபோது, எதிரிகள், அரசு தரப்பு சாட்சியங்களை மறுத்து, பொய் சாட்சியம் எனத் தெரிவித்தார்கள். மேலும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தார்கள். எனவே எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரித்துக் கொள்ளப்படவில்லை.

6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில்,

> "எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள், அரசு தரப்பால் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? ஆமெனில், எதிரிகளுக்கு விதிக்கப்படவேண்டிய தண்டனை என்ன?"

என்பதேயாகும்.

7. அரசு தரப்பில், மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.11 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அவர்களின் வாயிலாக அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன. மேலும், இவ்வழக்கில் அரசு தரப்பில் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில், சாட்சிகளோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்-படவில்லை. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

8. அரசு தரப்பில், எதிரிகளுக்கு எதிரான குற்றமானது தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால், எதிரிகள் சட்டப்படி தண்டிக்கப்படவேண்டும் என வாதம் செய்யப்பட்டது.

9. எதிரிகள் தரப்பில், எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எதிரிகள் எவ்வித குற்றமும் செய்யவில்லை என்றும், எனவே, எதிரிகளை விடுதலை செய்யவேண்டுமென்றும் வாதம் செய்யப்பட்டது.

10. **பிரச்சினைக்கான தீர்வு**:

(i) 4, 5 எதிரிகளுக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 147-ன் கீழான குற்றத்தைப் பொறுத்து, 29.10.2016 ஆம் தேதி இரவு 09.30 மணியளவில் கீழநீலிதநல்லூர், நாராணாபுரம் தெருவில் உள்ள சாட்சி ராமர் என்பவரின் வீட்டின் முன்பு வைத்து 4 மற்றும் 5 எதிரிகள் கைகளில் அபாயகரமான ஆயுதங்களான இரும்பு கம்பி மற்றும் வெட்டும் ஆயுதங்களான கூரான அரிவாள்களை வைத்திருந்த 1 முதல் 3 எதிரிகளுடன் சேர்ந்துகொண்டு குற்றம் புரியும் நோக்குடன் சட்டவிரோத கலககும்பலாக கலகம் செய்யும் எண்ணத்துடன் சட்டவிரோத கலகக் கும்பலாக மேற்படி இடத்தில் ஒன்று கூடினார்கள் என்பதும்,

(ii) 1, 2, 3 எதிரிகளுக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 148-ன் கீழான குற்றத்தைப் பொறுத்து, 1வது எதிரி கையில் அபாயகரமான ஆயுதமான இரும்பு கம்பியை வைத்துக்கொண்டும், 2 மற்றும் 3 எதிரிகள் அபாயகரமான வெட்டும் ஆயுதங்களான அரிவாள்களை வைத்துக்கொண்டும், 4, 5 எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு குற்றம் புரியும் நோக்குடன் சட்டவிரோத கலககும்பலாக கலகம் விளைவிக்கும் எண்ணத்துடன் கையில் மனித உயிருக்கு ஊறு விளைவிக்கும் அபாயகரமான ஆயுதங்களுடன் மேற்படி இடத்தில் சட்டவிரோத கலகக் கும்பலாக ஒன்று கூடினார்கள் என்பதும்,

(iii) எதிரிகளுக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 294(பி)-ன் கீழான குற்றத்தைப் பொறுத்து, எதிரிகள் அனைவரும் சாட்சி லெட்சுமணனை பார்த்து டாக்டர் ராணிக்கும் தங்களுக்கும் உள்ள இடப் பிரச்சனையில் ஏண்டா தலையிடுற , சின்ன பிள்ளைகள் நடமாடுற இடத்துல பட்டாசு வெடிக்கிற புண்டமவனே என பொதுயிடத்தில் வைத்து கேட்பவர்களுக்கு எரிச்சலூட்டும் விதத்தில் ஆபாசமாகவும், காமதுாரமாகவும் பேசி மேற்படி சாட்சியை அவமானப்படுத்தினார்கள் என்பதும்,

(iv) 1வது எதிரிக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 307-ன் கீழான குற்றத்தைப் பொறுத்து, 1வது எதிரி மேற்படி சாட்சி லெட்சுமணனை கொலை செய்யவேண்டுமென்ற நோக்கத்தில் மேற்படி சாட்சியை பார்த்து சாவுடா புண்டமவனே எனச் சொல்லி 1வது எதிரி கையில் வைத்திருந்த அபாயகரமான ஆயுதமான இரும்பு கம்பியால் மேற்படி சாட்சியின் நடுமண்டையில் ஓங்கி அடித்து மண்டையை உடைத்ததாகவும், அவ்வாறு 1வது எதிரி இரும்பு கம்பியால் அடித்த அடி சரியாக மேற்படி சாட்சியின் உச்சந்தலையில் பட்டு மேற்படி சாட்சி மரணித்திருப்பார் என்பதும், அதனால் 1வது எதிரி கொலைக்குற்றத்திற்கு ஆளாகியிருப்பார் என தெரிந்தே மேற்படி செயலை புரிந்து கொலை முயற்சி செய்தார் என்பதும்,

(v) 2 வது எதிரிக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 307-ன் கீழான குற்றத்தைப் பொறுத்து, 2 வது எதிரி சாட்சி நாகராஜனை கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் மேற்படி சாட்சியை பார்த்து நீயும் அவன் கூட சேர்ந்து சாவுடா எனச் சொல்லி 2 வது எதிரி கையில் வைத்திருந்த அபாயகரமானதும், வெட்டும் ஆயுதமுமான அரிவாளால் மேற்படி சாட்சியின் தலையின் வலதுபக்கம் வெட்டியதாகவும், அவ்வாறு 2 வது எதிரி அரிவாளால் வெட்டிய வெட்டு சரியாக மேற்படி சாட்சியின் உச்சந்தலையில் பட்டு மேற்படி சாட்சி மரணித்திருப்பார் என்பதும், அதனால் 2 வது எதிரி கொலைக்குற்றத்திற்கு ஆளாகியிருப்பார் என தெரிந்தே மேற்படி செயலை புரிந்து கொலை முயற்சி செய்தார் என்பதும்,

(vi) 3 வது எதிரிக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 324-ன் கீழான குற்றத்தைப் பொறுத்து, 3 வது எதிரி சாட்சி ராமரை அவரது கையில் வைத்திருந்த அபாயகரமானதும், வெட்டும் ஆயுதமுமான அரிவாளால் மேற்படி சாட்சியின் கால் முட்டில் தம்மிச்சையாக வெட்டி ரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்பதும்,

(vii) எதிரிகளுக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 506(2) (2 எண்ணிக்கைகள்)-ன் கீழான குற்றத்தைப் பொறுத்து, எதிரிகள் அனைவரும் சாட்சிகள் ராமரையும், பொன்ராஜையும் பார்த்து இனிமேல் எங்க பிரச்சனையில் தலையிட்டால் உங்களை வெட்டிக் கொலை செய்துவிடுவோம் என்று உயிர் பயம் ஏற்படுத்தும் நோக்கில் குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்பதும்,

(viii) 3 முதல் 5 எதிரிகளுக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 307 உ/இ 149-ன் கீழான குற்றத்தைப் பொறுத்து, சாட்சி லெட்சுமணனையும், நாகராஜையும் 1, 2 எதிரிகள் கொலை செய்ய முற்சித்த கொடுஞ்செயலின்போது 3 முதல் 5 எதிரிகள் மேற்படி 1, 2 எதிரிகளுடன் சேர்ந்துகொண்டு குற்றம் புரிய வேண்டுமென்ற பொதுவான நோக்கத்துடன் மேற்படி 1, 2 எதிரிகளின்

கொடுஞ்செயலினை நிறைவேற்றும் பொருட்டு சட்டவிரோத கலகக் கும்பலில் உறுப்பினராக இருந்து மேற்படி செயலை செய்ய உறுதுணையாக இருந்தனர் என்பதும், அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை பரிசீலனை செய்யவேண்டியுள்ளது.

11. இந்த வழக்கில் புகார்தாரரான ராமர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். சம்பவத்தில் காயம்பட்ட சாட்சிளாக அ.சா.2 லட்சுமணன், அ.சா.3 பொன்ராஜ், அ.சா.4 நாகராஜன் ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சிகளாக அ.சா.5 கருப்பசாமி, அ.சா.6 சுப்பையா, அ.சா.9 பாலமுருகன் ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். பார்வை மகஜர் சாட்சிகளாக அ.சா.7 மொரார்ஜி தேசாய், அ.சா.8 முத்துக்குமார் ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக அ.சா.10 பேச்சிமுத்து விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.11 முத்து பிரேம்சந்த் இவ்வழக்கினை விசாரணை செய்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

12. முதலில், அரசு தரப்பில் சம்பவம் குறித்து புகார்தாரரான அ.சா.1 இராமர் தனது சாட்சியத்தில் 4 ம் எதிரி தனது பெரியப்பா எனவும், ஆஜர் 5 ம் எதிரி தனது பெரியம்மா எனவும், ஆஜர் 3 ம் எதிரி தனது மாமா எனவும், 1, 2 எதிரிகள் தனக்கு அண்ணன் முறை ஆவார்கள் எனவும், 6 ஆண்டுகளுக்கு முன்பு தீபாவளி அன்று தாங்கள் பேசிக்கொண்டிருந்ததாகவும், அப்போது கூட்டமாக இருந்ததாகவும், கல் வந்து தன் மேல் விழுந்ததாகவும், தன் தம்பி லெட்சுமணன் மற்றும் சித்தப்பா நாகராஜ் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது என்றும், கற்கள் விழுந்ததால் தனக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றும், தன் தம்பிக்கு உச்சந்தலையில் காயம் ஏற்பட்டது என்றும், தன் சித்தப்பாவிற்கும் தலையில் காயம் ஏற்பட்டது என்றும், அதன் பின்பு காயம்பட்ட தங்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும், பின்பு அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் இருந்தபோது தன்னிடம்

போலீசார் எழுதாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள் எனவும், அதில் உள்ள அ.சா.ஆ.1 கையெழுத்து தன்னுடையதுதான் எனவும் அரசு தரப்பு வழக்கு சங்கதிகளுக்கு முரணாக சாட்சியமளித்துள்ளார்.

13. அதுபோல், சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் அ.சா.2 லெட்சுமணன் தனது சாட்சியத்தில், அ.சா.1 தன் உடன் பிறந்த அண்ணன் எனவும், அ.சா.3 தனது சித்தப்பா எனவும், ஆசுர் எதிரிகளை தெரியும் எனவும், சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு தீபாவளி அன்று அ.சா.1, அ.சா.3 மற்றும் தம்பி பொன்ராஜ் ஆகியோர் பேசிக்கொண்டிருந்ததாகவும், அப்போது அந்த பக்கம் சத்தமாக கேட்டதாகவும், திடீரென்று தங்கள் மேல் கற்கள் விழுந்ததாகவும், தனக்கு தலையில் காயம் ஏற்பட்டதாகவும், அ.சா.1 மற்றும் அ.சா.3 க்கும் காயம் ஏற்பட்டதாகவும், பொன்ராஜ்க்கு தலையில் காயம் ஏற்பட்டதாகவும், அப்போது தனக்கு தலையில் காயம் ஏற்பட்டதால் தான் எவ்வாறு மருத்துவமனைக்கு சேர்ந்தேன் என்று தனக்கு தெரியவில்லை என்றும், சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் இருந்தபோது தன்னிடம் போலீசார் எழுதாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள் எனவும் அரசு தரப்பு வழக்கு சங்கதிகளுக்கு முரணாக சாட்சியமளித்துள்ளார்.

14. அதுபோல், சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் அ.சா.3 பொன்ராஜ் தனது சாட்சியத்தில், அ.சா.1 மற்றும் அ.சா.2 தனது பெரியப்பா மகன்கள் என்றும், நாகராஜ் தனது தந்தை எனவும், ஆஜர் எதிரிகளை தெரியும் எனவும், சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு தீபாவளி அன்று தான், அ.சா.1, அ.சா.2 மற்றும் தனது அப்பா, தன் அண்ணன் லெட்சுமணன் வீட்டின் முன்பு பேசிக்கொண்டிருந்ததாகவும், அப்போது அந்த பக்கம் சத்தமாக கேட்டதாகவும், திடீரென்று தங்கள் மேல் கற்கள் விழுந்ததாகவும், அ.சா.1 மற்றும் அ.சா.2 க்கும் தலையில் காயம் ஏற்பட்டதாகவும், தனது தந்தைக்கு தலையில் காயம் ஏற்பட்டதாகவும், அப்போது தனக்கு காலில்

காயம் ஏற்பட்டதால் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சேர்ந்ததாகவும் அரசு தரப்பு வழக்கு சங்கதிகளுக்கு முரணாக சாட்சியமளித்துள்ளார்.

15. அதுபோல், சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் அ.சா.4 நாகராஜ் தனது சாட்சியத்தில், சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு தீபாவளி அன்று தான், தனது அண்ணன் மகன் இராமர், லெட்சுமணன், தனது மகன் பொன்ராஜ் அகியோர் தனது அண்ணன் வீட்டின் முன்பு பேசிக்கொண்டிருந்ததாகவும், சத்தம் கேட்டது எனவும், இருட்டாக இருந்தது எனவும், கல் வந்து தன் தலையில் விழுந்ததில் தன் மண்டை உடைந்தது எனவும், அதில் தனக்கும் லெட்சுமணனுக்கும் காயம் ஏற்பட்டதாகவும், எப்படி காயம் ஏற்பட்டது என்று தெரியவில்லை எனவும் அரசு தரப்பு வழக்கு சங்கதிகளுக்கு முரணாக சாட்சியமளித்துள்ளார்.

16. அதுபோல், சம்பவம் பற்றி கூறும் சாட்சியாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் அ.சா.5 கருப்பசாமி தனது சாட்சியத்தில் சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு சம்பவம் நடந்ததாக கேள்விப்பட்டதாகவும், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது எனவும் அரசு தரப்பு வழக்கு சங்கதிகளுக்கு முரணாக சாட்சியமளித்துள்ளார்.

17. அதுபோல், சம்பவம் பற்றி கூறும் சாட்சியாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் அ.சா.6 சுப்பையா தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளை தெரியும் எனவும், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது எனவும் அரசு தரப்பு வழக்கு சங்கதிகளுக்கு முரணாக சாட்சியமளித்துள்ளார்.

18. அதுபோல், பார்வை மகஜர் சாட்சியாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் அ.சா.7 மொரார்ஜி தேசாய் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியும் எனவும், சுமார் 10

ஆண்டுகளுக்கு முன்பு பனவடலிசத்திரம் காவல்நிலையத்தில் உள்ள போலீசார் எழுதாத வெள்ளை பேப்பரில் தன்னிடம் அ.சா.ஆ.2 கையொப்பம் வாங்கியதாக அரசு தரப்பு வழக்கு சங்கதிகளுக்கு முரணாக சாட்சியமளித்துள்ளார்.

19. அதுபோல், மற்றொரு பார்வை மகஜர் சாட்சியாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் அ.சா.8 முத்துக்குமார் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியும் எனவும், சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு பனவடலிசத்திரம் காவல்நிலையத்தில் உள்ள போலீசார் எழுதாத வெள்ளை பேப்பரில் தன்னிடம் அ.சா.ஆ.3 கையொப்பம் வாங்கியதாக அரசு தரப்பு வழக்கு சங்கதிகளுக்கு முரணாக சாட்சியமளித்துள்ளார்.

20. அதுபோல், சம்பவம் பற்றி கூறும் சாட்சியாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் அ.சா.9 பாலமுருகன் தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளை தெரியும் எனவும், சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது எனவும், இந்த வழக்கில் காயம்பட்ட அ.சா.1 முதல் அ.சா.4 நபர்களுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று தனக்கு தெரியாது எனவும் அரசு தரப்பு வழக்கு சங்கதிகளுக்கு முரணாக சாட்சியமளித்துள்ளார்.

21. அதுபோல், ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் அ.சா.10 பேச்சிமுத்து தனது சாட்சியத்தில் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு பணவடலிசத்திரம் காவல்நிலையத்திற்கு வேறு ஒரு வழக்கு சம்மந்தமாக சென்றபோது பணவடலிசத்திரம் போலீசார் தன்னிடம் எழுதாக இரண்டு வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் எனவும், அது தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் 1வதாக உள்ள அ.சா.ஆ.4 கையொப்பம், அத்தாட்சியில் 1வதாக உள்ள அ.சா.ஆ.5 கையொப்பம் தன்னுடையதுதான் எனவும் அரசு தரப்பு வழக்கு சங்கதிகளுக்கு முரணாக சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.1 முதல் அ.சா.10

வரையானவர்கள், அரசு தரப்பு குறுக்கு விசாரணையின்போதும், அரசு தரப்பு வழக்கிற்கு ஒத்து, அரசு தரப்புக்கு பயனளிக்கும் வகையில் யாதொரு சாட்சியமும் அளிக்கவில்லை.

22. இவ்வழக்கில், புகார்தாரரான அ.சா.1 ராமர் எதிரிகள் மீது கொடுத்த புகாரின்பேரிலேயே வழக்கை புலன் விசாரணை அதிகாரி புலன் விசாரணை செய்துள்ளார். ஆனால், இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 அரசு தரப்பு வழக்கு சங்கதிகளுக்கு முரணாக அரசு தரப்பில் அ.சா.1, பிறழ் சாட்சியம் அளித்துள்ள நிலையில், இவ்வழக்கினை புலன்விசாரணை செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் முத்து பிரேம்சந்த் அ.சா.11 ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு, எதிரிகள்தான் குற்றத்தை செய்தார்கள் என முடிவுக்கு வர இயலாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

23. மேலும், அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட, சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சி, பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபட சாட்சிகள் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையெழுத்து செய்த அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், எதிரியை, அரசு தரப்பில் குறிப்பிடப்படும் குற்றத்துடன் பிணைத்து எந்தவிதமான சங்கதிகளும் கூறாமல், வழக்கு சம்பவம் குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது எனக்கூறி பிறழ் சாட்சிகளாக மாறியுள்ள நிலையில், இவ்வழக்கினை புலன்விசாரணை செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் முத்து பிரேம்சந்த் அ.சா.11 ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரிகளை குற்றத்துடன் பிணைக்க போதுமான காரணங்கள் இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

24. எனவே, மேற்கண்ட அ.சா.1 முதல் அ.சா.11 வரையிலான அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1

மற்றும் சா.பொ.2 பரிசீலனையிலிருந்து, 4, 5 எதிரிகளுக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 147-ன் கீழான குற்றத்தைப் பொறுத்து, 29.10.2016 ஆம் தேதி இரவு 09.30 மணியளவில் கீழநீலிதநல்லூர், நாராணாபுரம் தெருவில் உள்ள சாட்சி ராமர் என்பவரின் வீட்டின் முன்பு வைத்து 4 மற்றும் 5 எதிரிகள் கைகளில் அபாயகரமான ஆயுதங்களான இரும்பு கம்பி மற்றும் வெட்டும் ஆயுதங்களான கூரான அரிவாள்களை வைத்திருந்த 1 முதல் 3 எதிரிகளுடன் சேர்ந்துகொண்டு குற்றம் புரியும் நோக்குடன் சட்டவிரோத கலககும்பலாக கலகம் செய்யும் எண்ணத்துடன் சட்டவிரோத கலகக் கும்பலாக மேற்படி இடத்தில் ஒன்று கூடினார்கள் என்பதும், 1, 2, 3 எதிரிகளுக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 148-ன் கீழான குற்றத்தைப் பொறுத்து, 1வது எதிரி கையில் அபாயகரமான ஆயுதமான இரும்பு கம்பியை வைத்துக்கொண்டும், 2 மற்றும் 3 எதிரிகள் அபாயகரமான வெட்டும் ஆயுதங்களான அரிவாள்களை வைத்துக்கொண்டும், 4, 5 எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு குற்றம் புரியும் நோக்குடன் சட்டவிரோத கலககும்பலாக கலகம் விளைவிக்கும் எண்ணத்துடன் கையில் மனித உயிருக்கு ஊறு விளைவிக்கும் அபாயகரமான ஆயுதங்களுடன் மேற்படி இடத்தில் சட்டவிரோத கலகக் கும்பலாக ஒன்று கூடினார்கள் என்பதும், எதிரிகளுக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 294(பி)-ன் கீழான குற்றத்தைப் பொறுத்து, எதிரிகள் அனைவரும் சாட்சி லெட்சுமணனை பார்த்து டாக்டர் ராணிக்கும் தங்களுக்கும் உள்ள இடப் பிரச்சனையில் ஏண்டா தலையிடுற , சின்ன பிள்ளைகள் நடமாடுற இடத்துல பட்டாசு வெடிக்கிற புண்டமவனே என பொதுயிடத்தில் வைத்து கேட்பவர்களுக்கு எரிச்சலூட்டும் விதத்தில் ஆபாசமாகவும், காமதுாரமாகவும் பேசி மேற்படி சாட்சியை அவமானப்படுத்தினார்கள் என்பதும், 1வது எதிரிக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 307-ன் கீழான குற்றத்தைப் பொறுத்து, 1வது எதிரி மேற்படி சாட்சி லெட்சுமணனை கொலை செய்யவேண்டுமென்ற நோக்கத்தில் மேற்படி சாட்சியை பார்த்து சாவுடா புண்டமவனே எனச் சொல்லி 1வது எதிரி கையில் வைத்திருந்த அபாயகரமான ஆயுதமான இரும்பு கம்பியால் மேற்படி சாட்சியின் நடுமண்டையில் ஓங்கி அடித்து மண்டையை உடைத்ததாகவும், அவ்வாறு 1வது எதிரி இரும்பு கம்பியால் அடித்த அடி சரியாக மேற்படி சாட்சியின் உச்சந்தலையில் பட்டு மேற்படி சாட்சி

மரணித்திருப்பார் என்பதும், அதனால் 1வது எதிரி கொலைக்குற்றத்திற்கு ஆளாகியிருப்பார் என தெரிந்தே மேற்படி செயலை புரிந்து கொலை முயற்சி செய்தார் என்பதும், 2 வது எதிரிக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 307-ன் கீழான குற்றத்தைப் பொறுத்து, 2 வது எதிரி சாட்சி நாகராஜனை கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் மேற்படி சாட்சியை பார்த்து நீயும் அவன் கூட சேர்ந்து சாவுடா எனச் சொல்லி 2 வது எதிரி கையில் வைத்திருந்த அபாயகரமானதும், வெட்டும் ஆயுதமுமான அரிவாளால் மேற்படி சாட்சியின் தலையின் வலதுபக்கம் வெட்டியதாகவும், அவ்வாறு 2 வது எதிரி அரிவாளால் வெட்டிய வெட்டு சரியாக மேற்படி சாட்சியின் உச்சந்தலையில் பட்டு மேற்படி சாட்சி மரணித்திருப்பார் என்பதும், அதனால் 2 வது எதிரி கொலைக்குற்றத்திற்கு ஆளாகியிருப்பார் என தெரிந்தே மேற்படி செயலை புரிந்து கொலை முயற்சி செய்தார் என்பதும், 3 வது எதிரிக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 324-ன் கீழான குற்றத்தைப் பொறுத்து, 3 வது எதிரி சாட்சி ராமரை அவரது கையில் வைத்திருந்த அபாயகரமானதும், வெட்டும் ஆயுதமுமான அரிவாளால் மேற்படி சாட்சியின் கால் முட்டில் தம்மிச்சையாக வெட்டி ரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்பதும், எதிரிகளுக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 506(2) (2 எண்ணிக்கைகள்)-ன் கீழான குற்றத்தைப் பொறுத்து, எதிரிகள் அனைவரும் சாட்சிகள் ராமரையும், பொன்ராஜையும் பார்த்து இனிமேல் எங்க பிரச்சனையில் தலையிட்டால் உங்களை வெட்டிக் கொலை செய்துவிடுவோம் என்று உயிர் பயம் ஏற்படுத்தும் நோக்கில் குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்பதும், 3 முதல் 5 எதிரிகளுக்கு எதிரான, இ.த.ச., பிரிவு 307 உ/இ 149-ன் கீழான குற்றத்தைப் பொறுத்து, சாட்சி லெட்சுமணனையும், நாகராஜையும் 1, 2 எதிரிகள் கொலை செய்ய முற்சித்த கொடுஞ்செயலின்போது 3 முதல் 5 எதிரிகள் மேற்படி 1, 2 எதிரிகளுடன் சேர்ந்துகொண்டு குற்றம் புரிய வேண்டுமென்ற பொதுவான நோக்கத்துடன் மேற்படி 1, 2 எதிரிகளின் கொடுங்செயலினை நிறைவேற்றும் பொருட்டு சட்டவிரோத கலகக் கும்பலில் உறுப்பினராக இருந்து மேற்படி செயலை செய்ய உறுதுணையாக இருந்தனர் என்பதும், அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, 1வது எதிரிக்கு எதிரான இ.த.ச., பிரிவுகள் 148, 294(பி), 307, 506(2)

(2 எண்ணிக்கை), 2 வது எதிரிக்கு எதிரான இ.த.ச., பிரிவுகள் 148, 294(பி), 307, 506(2) (2 எண்ணிக்கை), 3 வது எதிரிக்கு எதிரான இ.த.ச., பிரிவுகள் 148, 294(பி), 324, 506(2) (2 எண்ணிக்கை), 307 உ/இ 149, மற்றும் 4 வது, 5 வது எதிரிகளுக்கு எதிரான இ.த.ச., பிரிவுகள் 147, 294(பி), 506(2) (2 எண்ணிக்கை), 307 உ/இ 149 கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படாததால், எதிரிகள் மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் அல்லர் என முடிவு செய்து, அவ்வாறே இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

25. இறுதியாக, 1 வது எதிரி இ.த.ச., பிரிவுகள் 148, 294(பி), 307, 506(2) (2 எண்ணிக்கை) கீழான குற்றத்தை பொருத்தும், 2 வது எதிரி இ.த.ச., பிரிவுகள் 148, 294(பி), 307, 506(2) (2 எண்ணிக்கை) கீழான குற்றத்தை பொருத்தும், 3 வது எதிரி இ.த.ச., பிரிவுகள் 148, 294(பி), 324, 506(2) (2 எண்ணிக்கை), 307 உ/இ 149 கீழான குற்றத்தை பொருத்தும், 4 வது, 5 வது எதிரிகள் இ.த.ச., பிரிவுகள் 147, 294(பி), 506(2) (2 எண்ணிக்கை), 307 உ/இ 149 கீழான குற்றத்தை பொருத்தும் குற்றவாளிகள் அல்லர் என முடிவு செய்து, எதிரிகளை கு.வி.மு.ச., 235(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் பிறப்பித்துக் கொடுத்த பிணைமுறிகள் இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் தானாகவே ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

26. இவ்வழக்கில் வழக்கு சொத்து எண்.10/2022 ல் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சுமார் 30 செ.மீ இரும்பு பாகமும், 11 செ.மீ கொம்பு பிடியும் கூடிய மொத்தம் 41 செ.மீ நீளமுள்ள இரும்பு அருவாள் ஒன்று, சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சுமார் 121 செ.மீ நீளமும், 2 செ.மீ சுற்றளவும் கொண்ட கம்பி ஒன்றை மேல்முறையீட்டு காலத்திற்குபின் அழிக்க இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சுச் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07-ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MAHINDRAVARMA P Digitally signed by MAHINDRAVARMA P Date: 2026.04.07 20:16:07 -0300

உதவி அமர்வு நீதிபதி,
சங்கரன்கோவில்.

**1. அரசு தரப்பு சாட்சிகள்:**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. இராமர் |
| அ.சா.2 | திரு. லெட்சுமணன் |
| அ.சா.3 | திரு. பொன்ராஜ் |
| அ.சா.4 | திரு. நாகராஜ் |
| அ.சா.5 | திரு. கருப்பசாமி |
| அ.சா.6 | திரு. சுப்பையா |
| அ.சா.7 | திரு. மொரார்ஜி தேசாய் |
| அ.சா.8 | திரு. முத்துக்குமார் |
| அ.சா.9 | திரு. பாலமுருகன் |
| அ.சா.10 | திரு. பேச்சிமுத்து |
| அ.சா.11 | திரு. முத்து பிரேம்சந்த் |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | ----- | புகார்மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | ----- | பார்வை மகஜரில் 1 வதாக உள்ள அ.சா.7 ன் கையொப்பம் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.3 | ----- | பார்வை மகஜரில் 2 வதாக உள்ள அ.சா.8 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | ----- | ஒப்புதல் வாக்குமூலத்தில் 1 வதாக உள்ள அ.சா.10 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.5 | ----- | அத்தாட்சியில் 1 வதாக உள்ள அ.சா.10 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.6 | ----- | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.7 | ----- | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.8 | ----- | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.9 | ----- | 4 வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.10 | ----- | அத்தாட்சி |
| அ.சா.ஆ.11 | ----- | படிவம் 95 |
| அ.சா.ஆ.12 | ----- | நாகராஜ் என்பவரின் காயச்சான்று |
| அ.சா.ஆ.13 | ----- | பொன்ராஜ் என்பவரின் காயச்சான்று |
| அ.சா.ஆ.14 | ----- | லட்சுமணன் என்பவரின் காயச்சான்று |
| அ.சா.ஆ.15 | ----- | அ.சா.1 ராமர் என்பவரின் காயச்சான்று |

**3. அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்**:

| | | |
|---|---|---|
| சா.பொ.1 | ---- | சுமார் 30 செ.மீ இரும்பு பாகமும் 11 செ.மீ கொம்பு பிடியும் கூடிய மொத்தம் 41 செ.மீ நீளமுள்ள இரும்பு அருவாள் ஒன்று |

| | |
|---|---|
| சா.பொ.2 | சுமார் 121 செ.மீ நீளமும், 2 செ.மீ சுற்றளவும் கொண்ட கம்பி ஒன்று |

**<u>4. எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்கள்</u>: இல்லை**

MAHINDRAVARMA P

Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.04.07 20:16:16 -0300

**உதவி அமர்வு நீதிபதி,**

**சங்கரன்கோவில்.**

உதவி அமர்வு நீதிமன்றம், சங்கரன்கோவில்

அமர்வுவழக்கு எண்.691/2018

தீர்ப்புரை (அசல்/வரைவு)

நாள் 07.04.2026